**நவம்பர் – 17**

# TNPSC துளிகள்

- மணப்பாறை சிப்காட் தொழிற்துறைப் பூங்காவில் (திருச்சி மாவட்டம்) உற்பத்தியைத் தொடங்கிய முதல் நிறுவனமாக ரினோ ஸ்கேஃப் இண்டஸ்ட்ரி பிரைவேட் லிட் என்ற நிறுவனம் மாறியுள்ளது.
- 16வது இந்திய இயங்கலை வழியிலான விளையாட்டு வசதி உருவாக்க வல்லுநர்கள் மாநாடானது (IGDC) ஐதராபாத்தில் நடைபெற்றது.
- இந்தியாவின் தேசியப் புத்தக அறக்கட்டளை (NBT) ஆனது, 43 வது ஷார்ஜா சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில் (SIBF) கையால் எழுதப் பட்டுள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அசல் கையெழுத்துப் பிரதியின் பெரும் மதிப்புமிக்கப் பிரதியைக் காட்சிப் படுத்தியது.
- இந்தியக் கடற்படையானது, 11,098 கிலோ மீட்டர் கடற்கரை மற்றும் 2.4 மில்லியன் சதுர கிலோ மீட்டர் அளவிலான பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் 'சீ விஜில்-24' எனப்படும் நான்காவது கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியினை நடத்த உள்ளது.
- ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆனது, நவீன கால அடிமைத்தனத்தைத் தடுப்பதற்காகவும் அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் என்று கிறிஸ் இவான்ஸ் என்பவரை நாட்டின் முதல் அடிமைத்தன எதிர்ப்பு ஆணையரை நியமித்துள்ளது.
- ஏர் இந்தியா மற்றும் விஸ்தாரா ஆகிய இரு விமான நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு ஆனது சமீபத்தில் அதிகாரப்பூர்வமாக நிறைவு செய்யப்பட்டது.
    - புதிதாக ஒன்றிணைக்கப்பட்ட இந்த நிறுவனமானது தற்போது 208 விமானங்களின் சேவையுடன் சுமார் 90க்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச இடங்களை இணைக்கிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஊசித் தகரை செடிகளை அகற்றுதல்





- முதுமலை புலிகள் வளங்காப்பகத்தின் சில பகுதிகளில் உள்ள ஒரு ஊடுருவல் வகை செடியை அகற்றும் பணியை தமிழக வனத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

- சென்னா டோரா எனப்படும் ஊசித் தகரை செடியானது மத்திய அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட தாவர இனமாகும்.
- இது கடந்த சில பல ஆண்டுகளாக இந்த வளங்காப்பகத்தின் சுற்றுச்சூழல் தாங்கல் மண்டலத்தில் உள்ள சீகூர் மற்றும் மோயார் பகுதிகளில் காணப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## புதிய நீர் மாசுபாடு அபராத விதிகள் 2024





- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆனது 1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தை மீறுதல் குறித்த விசாரணைகளை நடத்துவதற்கும் அபராதம் விதிப்பதற்குமான புதிய விதிகளை அறிவித்துள்ளது.
- நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) (விசாரணை நடத்தும் முறை மற்றும் அபராதம் விதித்தல்) விதிகள், 2024 எனப்படுகின்ற இந்தப் புதிய விதிகள் ஆனது உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.
- சமீபத்திய இந்தத் திருத்தத்தின்படி, இந்தச் சட்டம் தொடர்பான குற்றங்கள் மற்றும் இந்தச் சட்டத்தின் மீறல்கள் தண்டனைக்குரிய குற்றமற்றவை என்று குறிப்பிடப்பட்டு, அதற்குப் பதிலாக அபராதம் விதிக்கப்பட்டது.
- மாசுபாடு ஏற்படுத்தாத ‘வெள்ளை’ வகை தொழிற்துறைகளுக்கு முன் அனுமதி பெற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- பல குற்றங்கள், மீறல்கள் தொடர்பான வழக்குகளைத் தீர்ப்பதற்கும், தண்டனைகளை நிர்ணயிப்பதற்கும் அதிகாரிகளை நியமிக்க மத்திய அரசிற்கு அதிகாரம் அளித்தது.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள், மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு குழுக்கள் ஆகியவையும் இதில் ஈடுபடும்.
- தீர்ப்பளிக்கும் அதிகாரிக்கு, குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது விதி மீறலின் தன்மையை விவரித்துப் புகார்கள் பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு அறிக்கை அனுப்ப அதிகாரம்

உள்ளது.

- விதி மீறல் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள், தனக்காக வாதிடலாம் அல்லது ஒரு சட்டப் பிரதிநிதி மூலம் வாதிட முடியும்.
- எதிர் தரப்பினருக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் முழு விசாரணை செயல்முறையும் முடிக்கப்பட வேண்டும் என்று விதிகள் கூறுகின்றன.

## தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வரும் வெளிநாட்டு நிதியை மறுத்தல் அல்லது ரத்து செய்தல்

- வளர்ச்சி மேம்பாட்டிற்கு எதிரான செயல்பாடுகள் மற்றும் கட்டாய மத மாற்றங்களில் எந்தவொரு தன்னார்வத் தொண்டு நிறுவனமும் ஈடுபட்டாலும், 2010 ஆம் ஆண்டு வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டத்தின் (FCRA) கீழ் அவற்றின் பதிவு ரத்து செய்யப்படும்.
- அரசு சாராத அமைப்பிற்கான (NGO - தன்னார்வத் தொண்டு நிறுவனம்) வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டப் பதிவை மறுக்க அல்லது ரத்து செய்வதற்கான 17 காரணங்களை உள்துறை அமைச்சகம் பட்டியலிட்டுள்ளது.
- சமூக அல்லது மத நல்லிணக்கத்தைப் பாதிக்கக் கூடிய வகையிலான வெளிநாட்டு நிதியுதவியை ஏற்றுக் கொள்ளும் எந்தவொரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் FCRA பதிவும் ரத்து செய்யப்பட வேண்டும்.
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களின் படி, எந்தவொரு வெளிநாட்டு நிதியையும் அதன் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தாமல் இருந்தாலும் கூட அவற்றின் FCRA பதிவு ரத்து செய்யப்படும்.




## FSSAI அமைப்பின் புதிய வழிகாட்டுதல்கள்

- சோமாட்டோ மற்றும் ஸ்விகி உள்ளிட்ட இயங்கலை வழியிலான உணவு விநியோக தளங்களுக்கான புதிய வழிகாட்டுதல்களை இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் வெளியிட உள்ளது.
- இது ஒழுங்குமுறை இணக்கத்தை வலுப்படுத்துவதற்கும் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமான திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இணைய வழித் தளங்கள் ஆனது உணவுப் பொருட்களை அவை காலாவதியாகும் ஒரு காலத்திற்கு 45 நாட்களுக்கு முன்னதாகவே விநியோகிக்க வேண்டும்.

- சாத்தியமான உணவு மாசுபாட்டைத் தவிர்ப்பதற்காக உணவுப் பொருட்கள் மற்றும் உணவு அல்லாத பொருட்களை தனித்தனியாக நுகர்வோருக்கு வழங்குவதன் பெரும் முக்கியத்துவத்தையும் இது வலியுறுத்தியது.
- அது "பல்வேறு மாநிலங்களின் உணவு ஆணையர்களை இணைய வழித் தளங்களால் பயன்படுத்தப்படும் கிடங்குகள் மற்றும் பிற வசதிகள் மீதான ஒரு கண்காணிப்பை அதிகரிக்க வேண்டும்" என்று கூறியுள்ளது.
- கண்காணிப்பு மாதிரிச் சோதனைகளை அதிகரிக்கவும், மேலும் அதற்காக உணவுப் பாதுகாப்பு கண்காணிப்பு வாகனங்களை நன்கு பயன்படுத்துமாறும் மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேச அரசுகளுக்கு கோரப்பட்டுள்ளது.

**FSSAI PULLS UP E-COMMERCE AND QUICK-COMMERCE PLAYERS ON CONSUMER COMPLAINTS: SOURCES**

- FSSAI Calls For Strict Adherence To The Laws On Best Before/ Expiry Date
- FSSAI Tells E-Commerce And Quick-Commerce Players To Sell Products Which Have Either 30% Of Shelf Life Left Or 45 Days Before Expiry Date
- FSSAI Pulled Up E-Commerce And Quick-Commerce Players For Compliance Or Else Face Punitive Action
- FSSAI Told E-Commerce And Quick-Commerce For Mandatory Training Of Delivery Person On Food Packaging, Segregation And Delivery
- Medical Tests Of Delivery Personnel From Time To Time To Be Made Mandatory

# சர்வதேசச் செய்திகள்


## COP 29 - சர்வதேச கார்பன் சந்தைத் தரநிலைகள்




- 29வது பங்குதாரர்கள் மாநாடு (COP29) ஆனது, ஐக்கிய நாடுகள் சபையினால் முன் வைக்கப் பட்ட பாரீஸ் பருவநிலை உடன்படிக்கையின் 6வது பிரிவு தொடர்பான சில கார்பன் சந்தைத் தரநிலைகளை ஒப்புக் கொண்டுள்ளது.

- ❖ தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள கார்பன் உமிழ்வு குறைப்பு இலக்குகளை அடைய நாடுகள் தானாக முன்வந்து கார்பன் மதிப்பு வரவுகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இது வரையறுக்கிறது.
- ❖ உமிழ்வுக் குறைப்பு மற்றும் அகற்றுதல்கள் உண்மையானவை, கூடுதலானவை, சரி பார்க்கப் பட்டவை மற்றும் அளவிடக் கூடியவை என்றும் இது பெரும் உத்தரவாதம் அளிக்கிறது.
- ❖ இந்தப் பிரிவு 6 ஆனது, 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பாரீஸ் எனும் உடன்படிக்கையில் முன்மொழியப்பட்டது.
- ❖ இது சந்தை அடிப்படையிலான நெறிமுறையின் மூலம் தேசிய உமிழ்வுக் குறைப்பு இலக்குகளை அடைய நாடுகளுக்கு உதவும் ஒரு சர்வதேசக் கட்டமைப்பாகும்.
- ❖ இந்த நெறிமுறையில் தனியார் துறையும் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- ❖ இந்த சட்டப் பிரிவின் 6.2, 6.4 மற்றும் 6.8 ஆகிய முக்கிய உட்பிரிவுகள் ஆனது சந்தை சாராத அணுகுமுறைகளை உள்ளடக்கியது.

## COP 29 – உலக கரிம வரவு செலவின அறிக்கை




- ❖ உலக கார்பன் திட்ட அறிவியல் குழுவானது இந்தப் புதிய ஆய்வு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ புதைபடிவ எரிபொருட்களில் இருந்து வெளிவரும் உலகளாவிய கார்பன் உமிழ்வு ஆனது 2024 ஆம் ஆண்டில் இது வரை இல்லாத வகையில் அதிகப்பட்ச அளவை எட்டி உள்ளது.
- ❖ இந்த அறிக்கையில் புதைபடிவ கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) உமிழ்வுகள் சுமார் 37.4 பில்லியன் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு இது 2023 ஆம் ஆண்டில் இருந்த ஒரு அளவை விட 0.8% அதிகமாகும்.
- ❖ நிலப் பயன்பாட்டு மாற்றம் காரணமான (காடழிப்பு போன்றவை) உமிழ்வு சுமார் 4.2 பில்லியன் டன்கள் ஆகும்.
- ❖ மொத்த $CO_2$ உமிழ்வுகள் 2024 ஆம் ஆண்டில் 41.6 பில்லியன் டன்களாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில் இது கடந்த ஆண்டு 40.6 பில்லியன் டன்களாக இருந்தது.
- ❖ சீனாவின் உமிழ்வுகள் (உலகளாவிய மொத்த உமிழ்வில் 32%) ஆனது 0.2% அதிகரிக்கும்


என்று கணிக்கப்பட்டுள்ளது.

- அமெரிக்க நாட்டின் உமிழ்வுகள் (உலகளாவிய மொத்த உமிழ்வில் 13%) 0.6% குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் உமிழ்வுகள் (உலகளாவிய மொத்த உமிழ்வில் 8%) 4.6% அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உமிழ்வுகள் (உலகளாவிய மொத்த உமிழ்வில் 7%) 3.8% குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- உலகின் இன்ன பிற பகுதிகளின் உமிழ்வுகள் (உலகளாவிய மொத்த உமிழ்வில் 38%) சுமார் 1.1% அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- வளிமண்டல $CO_2$ அளவுகள் ஆனது, 2024 ஆம் ஆண்டில் மில்லியனுக்கு 422.5 பாகங்களை (ppm) எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில் இது 2023 ஆம் ஆண்டில் இருந்த ஒரு அளவினை விட 2.8 ppm அதிகம் ஆகும் மற்றும் தொழில்துறைக்கு முந்தைய காலத்தில் இருந்த நிலைகளை விட 52% அதிகம் ஆகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பனி மண்டலத்தின் நிலை குறித்த அறிக்கை 2024 – ICCI

FIGURE 2-2. Current Ice Loss Regions – Greenland and Antarctica




The rate of ice loss is now 5 times higher in Greenland and 25% higher in Antarctica compared to the early 1990s.


- இந்த அறிக்கையானது சர்வதேசப் பனி மண்டல பருவநிலை முன்னெடுப்பு (ICCI) என்ற அமைப்பினால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- கிரீன்லாந்து பகுதியின் பனிப்பரவல் ஆனது, தற்போது ஒரு மணி நேரத்திற்கு சுமார் 30 மில்லியன் டன் பனியை இழந்து வருகிறது.
- மேலும், வடக்கு கிரீன்லாந்தில் உள்ள பனிப்படிவு அடுக்குகள் 1978 ஆம் ஆண்டு முதல் அதன் மொத்த அளவில் 35% படிவுகளை இழந்துள்ளன.
- உலக கடல் மட்ட உயர்வு விகிதம் ஆனது கடந்த 30 ஆண்டுகளில் சுமார் இரு மடங்காக அதிகரித்துள்ளது.
- தற்போதையப் போக்குகளின்படி, 2050 ஆம் ஆண்டில் இது ஆண்டிற்கு 6.5 மில்லி மீட்டர் என்ற வீதத்தில் அதிகரிக்கும்.
- வெனிசுலா மற்றும் ஸ்லோவேனியா ஆகிய இரு பகுதிகள் நவீன காலத்தில் அவற்றின்

இறுதி பனிப்பாறைகளை இழந்தன.

- பனி மண்டலம் (தாழ் வெப்ப மண்டலம்) என்பது பூமியில் உள்ள பனி அல்லது பனிப் பகுதிகளைக் குறிக்கிறது என்ற நிலையில் இந்த பகுதியானது ஆண்டின் ஒரு பகுதியில் 0 டிகிரி செல்சியஸுக்கும் குறைவான வெப்பநிலையில் காணப்படும்.

# முக்கிய தினங்கள்

## இந்தியாவின் குழந்தைகள் தினம் - நவம்பர் 14




- இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் நினைவாக அனுசரிக்கப்படும் இது "பால் திவாஸ்" என்றும் அழைக்கப்படுகிறது.
- குழந்தைகளின் உரிமைகள், பராமரிப்பு மற்றும் கல்வி பற்றிய பொது விழிப்புணர்வை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குழந்தைகளுக்கான உள்நாட்டுத் திரைப்படங்களை உருவாக்குவதற்காக என்று, நேரு அவர்கள் 1955 ஆம் ஆண்டில் இந்தியக் குழந்தைகள் திரைப்பட சங்கத்தினை நிறுவச் செய்தார்.
- 1964 ஆம் ஆண்டில் பண்டித நேருவின் மறைவுக்குப் பிறகு, அவரது பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.
- உலக குழந்தைகள் தினம் ஆனது நவம்பர் 20 ஆம் தேதியும், சர்வதேச குழந்தைகள் தினம் ஜூன் 01 ஆம் தேதியும் கொண்டாடப் படுகிறது.

## 71வது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரம் 2024 – நவம்பர் 14/20

- ஒரு கூட்டுறவுச் சங்கம் என்பது மக்களுக்குச் சொந்தமான மற்றும் மக்கள் அதன் சரக்குகள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துவதற்காக மக்களுக்காக நடத்தப்படும் ஓர் அமைப்பாகும்.
- அகில இந்தியக் கூட்டுறவு வாரமானது இந்தியாவில் முதன்முதலில் 1953 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்த வார அளவிலானக் கொண்டாட்டத்தின் கருத்துரு, “Role of Cooperatives in Building Viksit Bharat” என்பதாகும்.

- வங்கித் துறையில் முதல் கடன் வழங்கீட்டுக் கூட்டுறவுச் சங்கம் ஆனது வங்காள அரசாங்கத்தின் ஆதரவுடன் 1903 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது.
- இந்தியாவின் கூட்டுறவு கடன் சங்கங்கள் சட்டம் ஆனது 1904 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதியன்று இயற்றப்பட்டது.
- 1919 ஆம் ஆண்டில் கூட்டுறவு ஆனது மாநிலப் பட்டியலில் ஒன்றாக மாறியது.
- 1938 ஆம் ஆண்டில் கடன் சுமை தீர்வு மற்றும் நில மேம்பாட்டிற்கானக் கடன்களை வழங்குவதற்காக நில அடமானக் கூட்டுறவு வங்கிகள் நிறுவப்பட்டன.
- அமுல் நிறுவனம் ஆனது 1946 ஆம் ஆண்டில் ஆனந்த் கிராமத்தில் கைரா மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் லிமிடெட் (KDCMPUL) ஆக நிறுவப்பட்டது.
- தற்போது, உலகின் மிகப்பெரிய கூட்டுறவு இயக்கமாக இந்தியா மாறியுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★